DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 255/2017 PW : 2

Name : வசந்தா Age -

Husband Name : Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 02.12.2024.

2ம் பிரதிவாதிக்கு குறுக்கு விசாரணை

சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் ஏதும் வரவில்லை வாதி அழைத்தின்பேரில் தான் வந்தேன். வழக்கு பற்றி தெரியுமா என்றால் வாதி பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மொத்த விவரம் தெரியுமா என்றால் 10 ஏக்கருக்கு மேல் இருக்கும். அந்த சொத்து செல்லப்ப ரெட்டியாருக்கு சொந்தமானது அது அவருடைய சம்பாதியம். இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக பத்திரம் பார்த்துள்ளேனா என்றால் அந்த நிலத்தில் விவசாய வேலை பார்த்து வந்தேன். வாதி தராட்சி கிராமத்தில் தான் இருக்கிறார். செல்லப்ப ரெட்டி உடன் பிறந்தவர் சுப்பிரமணி ஆவார். அவருக்கு குழந்தைகள் இல்லை மனைவியும் தற்போது இல்லை. வாதி செல்லப்ப ரெட்டியின் மகள் என்றும் தவா சொத்து செல்லப்ப ரெட்டி சொத்து என்று சொல்வதற்காக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். தவா சொத்து செல்லப்ப ரெட்டி சொத்தமானது என்று சொல்லித்தான் தெரியும் அது எவ்வாறு அவருக்கு கிடைக்கப்பெற்றது என்றால் அவர் சம்பாத்தியம். அவர் எந்த வருடம் இறந்தார் என்று தெரியாது ஆனால் பத்து வருடத்திற்கு மேல் இருக்கும். அவர் இறக்கும்போது எனக்கு 30 வயது. அவருடைய மகன்கள் தவா சொத்தை பாகம் பிரிந்து கொண்டார்களா என்றால் இல்லை தற்போது யார் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் பொதுவாக பயிர் செய்து வருகிறார்கள். 10 ஏக்கரையுட் 2 ம் பிரதிவாதி தான் பயிர் செய்கிறார். அந்த நிலத்தில் நான் கடைசியான 4 வருடத்திற்கு முன்பு வேலை செய்தேன். அப்போது 2 ம் பிரதிவாதி தான் பணம் கொடுத்தார். மல்லிக்கு திருமணம் ஆகி 20 வருடத்திற்கு மேல் இருக்கும். அவரது முதல் மகனுக்கு 39 வயது இருக்கும். மல்லிக்கு செல்லப்ப

ரெட்டியார் சொத்து கொடுத்தாரா என்றால் அது பற்றி தெரியாது. செல்லப்ப ரெட்டியின் தம்பி சுப்பிரமணி வாதிக்கு 92 சென்ட் அன்பாக கொடுத்தார். செல்லப்பரெட்டி உயிருடன் இருக்கும்போது வாதிக்கு சொத்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. செல்லப்ப ரெட்டியாரின் மகன்கள் தவா சொத்தை பாகம் பிரிந்து அவர்கள் சொத்துகளை தனி தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றும் பொதுவில் பயிர் செய்து வருகிறார்கள் என்றும் தவறாக மல்லிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

sd/. M.A. Kabeer
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
திருவள்ளூர்,